# மரண விசாரணைகள் – விசாரணையில் எதை எதிர்பார்க்கலாம்

அறிவிக்கக்கூடிய மரணங்களை குயின்ஸ்லாந்து மரணவிசாரணை நீதிமன்றம் (CCQ) விசாரணைசெய்யும்.

உங்களின் இழப்புக்காக உங்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

விசாரணைகள் பற்றிய பொதுவான தகவல்களை வழங்குவதை இந்த தகவல்தாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. வேறு தகவல்கள் உங்களுக்குத் தேவையானால், தயவுசெய்து பாருங்கள்: https://www.coronerscourt.qld.gov.au/__data/assets/pdf_file/0009/749412/Coronial-investigation-guide-for-families-and-friends.pdf

## விசாரணை என்றால் என்ன?

ஒரு மரணம் அல்லது தொடர்புபட்ட மரணங்களின் தொகுதி குறித்த காரணம் மற்றும் சுற்றுச்சூழல் பற்றி **தகவல்களைச் சேகரிக்கும் வழிமுறையாக** ஒரு மரணவிசாரணை அதிகாரியால் நீதிமன்றில் நடாத்தப்படும் வழக்கு விசாரணை எனப்படும். .

விசாரணைகள் வழக்கு விசாரணைகளல்ல: ஜூரர்களை அவர் ஈடுபடுத்துவதில்லை, குற்றம் அல்லது பொறுப்பு குறித்த கேள்விகளில் அவர் கவனம் செலுத்துவதில்லை.

நிகழ்வுகளைத் தீர்மானிப்பதற்கு மரணவிசாரணை அதிகாரிகள் விசாரணைகளைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் இதைப்போன்ற இறப்புகளைத் தடுக்கக்கூடிய சிபாரிசுகளைச் செய்கிறார்கள்.

## விசாரணையில் என்ன நடக்கிறது?

விசாரணைகள் அதன் சிக்கலான தன்மைகளில் வேறுபடுகின்றன, ஆனாலும் பொதுவாக இறந்தவரின் இறப்புக்கான சந்தர்ப்பசூழ்நிலைகள் பற்றி தகவல்களை வைத்திருக்கக்கூடிய மக்களிடமிருந்து மரணவிசாரணைஅதிகாரி சாட்சியங்களை செவிமடுப்பார். காவல் உத்தியோகத்தர்கள், குடும்ப அங்கத்தவர்கள், வைத்தியர்கள் மற்றும் விஞ்ஞானிகள், கண்ணால் பார்த்த சாட்சிக்காரர்கள் மற்றும் பொதுமக்கள் போன்ற தொழில்சார் நிபுணர்கள் சாட்சியம் அளிப்பவர்களுள் அடங்குவார்கள். உதாரணமாக யார் நீதிமன்றுக்கு வருவார்களென்பதை அறிந்துகொள்ள கடைசிப்பக்கத்தைப் பார்க்கவும்.

சாட்சியங்களை முழுவதையும் கேட்டபின்னர், மரணவிசாரணை அதிகாரி தனது கண்டுபிடிப்பைத் (முடிவைத்) தெரிவிப்பதற்காக விசாரணையை ஒத்திவைப்பார். ஒத்திவைப்புக்காலம் வேறுபடும், ஆனால் சிக்கலான வழக்குகளில் அது மாதக்கணக்காக நீடிக்கும்.

## விசாரணைகள் பொதுவானவையா?

அநேகமான மரணவிசாரணைகளுக்கு விசாரணைகள் வேண்டியதில்லை. பெரும்பான்மையான வழக்குகளில், ஒரு விசாரணையை நடாத்தாமலே மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பினை மேற்கொள்ளலாம். பின்வரும் சந்தர்ப்பங்களில் விசாரணைகள் நடாத்தப்படவேண்டும்:

- அந்த நபர் தடுப்புக்காவலில் இருந்தால்;
- அந்த நபர் ஒரு பொலிஸ் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் (ஒரு விசாரணை

தேவையில்லையென மரணவிசாரணை அதிகாரி நம்பாதுவிட்டால்); அல்லது

- அந்த நபர் பராமரிப்பில் இருக்கிறார் அத்துடன் அந்தப் பராமரிப்பு பற்றிய பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டிருந்தால்

கூடுதலாக, பொதுமக்கள் நலனுக்காக வழக்கு விசாரணைகளை மரணவிசாரணை அதிகாரிகள் நடாத்தலாம். உதாரணமாக, பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அல்லது மரணத்திற்கான காரணம் மற்றும் சூழ்நிலைகள் பற்றிக் குறிப்பிடத்தக்க சந்தேகம் இருக்கும்போது அமைப்பு குறைபாடுகளைச் சோதிப்பதற்காக ஒரு விசாரணையை நடாத்துவதற்கு மரணவிசாரணை அதிகாரி முடிவுசெய்யலாம். ஒரு விசாரணை நடாத்தப்படவேண்டுமென சட்டமா அதிபரும் வழிநடாத்தலாம்.

## ஒரு விசாரணை நடாத்தப்படவேண்டுமென எந்தவொரு நபரும் கேட்கலாமா?

ஆம். பொதுமக்கள் நலனில் விசாரணையொன்று நடாத்தப்படவேண்டுமென ஏன் நீங்கள் நினைக்கிறீர்களெனக் குறிப்பிட்டு எழுத்தில் மரணவிசாரணை அதிகாரிக்கு இந்த வேண்டுகோளை நீங்கள் விடுக்கலாம். உங்களின் வேண்டுகோளுக்கு பொதுவாக ஆறு மாதங்களுக்குள் மரணவிசாரணை அதிகாரி ஒரு முடிவினை மேற்கொள்வார். இந்த முடிவினை மேற்கொள்வதற்கான காலத்தை நீடிக்க மரணவிசாரணை அதிகாரி உங்களுடன் தொடர்புகொள்ளக்கூடும்.

விசாரணைக்காக விடுக்கப்படும் வேண்டுகோளை இந்த மரணவிசாரணை அதிகாரி விரும்பாதுவிட்டால், ஒரு விசாரணையை நாடாத்தக் கட்டளையிடுமாறு மாநில மரணவிசாரணை அதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் மேற்கொள்ளப்படலாம். மாநில மரணவிசாரணை அதிகாரி விசாரணையொன்றினை நடாத்த மறுத்தால், ஒரு விசாரணை நடாத்தப்படுவதற்கு மாவட்ட நீதிமன்றுக்கு விண்ணப்பம் ஒன்றினை மேற்கொள்ளலாம்.

## எப்போது விசாரணையொன்று நடாத்தப்படுமென எப்படி எனக்குத் தெரியவரும்?

விசாரணையொன்று நடாத்தப்படவேண்டுமானால், இறந்தவரின் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் அறிவிக்கப்படுவார். CCQ இணையத்தளத்தில் விசாரணை நடவடிக்கைகள் குறித்த ஒரு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இணையத்தளத்தில்: https://www.coronerscourt.qld.gov.au/findings-upcoming-inquests/inquest-proceedings-list

## யார் விசாரணையில் பங்குபற்றலாம்?

பொதுமக்கள் நலன் குறித்த விடயங்களை விசாரணைகள் ஆலோசிப்பதால், பொதுவாக அவை பொதுமக்களுக்குத் திறந்துவிடப்படும். மிகவும் அரிதாக, ஒரு பகுதிக்கு அல்லது முழுதாக விசாரணைகளிலிருந்து குறித்த தனிப்பட்டவர்களை அல்லது பொதுமக்களை விலக்கிவைக்க மரணவிசாரணை அதிகாரி முடிவுசெய்யலாம். விசாரிக்கப்பட்ட சான்றுகள், அல்லது எவரேனும் சாட்சிக்காரர்கள் அல்லது இறந்த நபரின் பெயர்கள் வெளியிடப்படுவதையும் மரணவிசாரணை அதிகாரி தடைசெய்யலாம்.

இறந்தவரின் குடும்பத்தினரும், நண்பர்களும் இந்த விசாரணைகளில் பங்குபற்றலாம். ஆயினும், இந்த விசாரணையின் நோக்கம் நிகழ்வுகளை உறுதிப்படுத்துவதாகும் அத்துடன் இது கடினமானதாக இருக்கலாம், இதை நினைவில் வைத்திருப்பது முக்கியமாகும். இந்த கடினமான காலத்தில், உளநலஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள் உங்களுக்குக்கிடைக்கும். இந்த

தகவல்தாளின் முடிவில் ஆதரவு சேவைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

சாட்சிக்காரர்களிடமிருந்து வாக்குமூலங்களைக் கேட்பது, ஒலிப்பதிவை கேட்பது மற்றும் ஒளிப்பதிவை பார்ப்பது போன்றவற்றை இந்த விசாரணை உள்ளடக்கும். சிக்கலான சட்டம் சம்பந்தமான விவாதங்கள் மற்றும் சாட்சியங்களின் விரிவான கருத்துகளையும் விசாரனைகள் உள்ளடக்கும்.

விசாரணைகள் எப்போதும் மரியாதைக்குரியவையாக இருப்பதை மரணவிசாரணை அதிகாரிகள் உறுதிப்படுத்தும் அதேவேளை, விவாதிக்கப்பட்ட எதிர்கொள்ளும் தகவல்களை உள்ளடக்குவதை ஆள்மாறாட்டம் அல்லது 'மழுங்கிய' தாக குடும்பங்கள் கருதுவது தவிர்க்கமுடியாததாகும்.

## குடும்பம் சட்டரீதியாக பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டுமா?

இந்த விசாரணையில் பங்குகொள்வதற்கு போதியளவு ஆர்வமுள்ள எவரும் (குடும்ப உறுப்பினர்கள் உட்பட) மரணவிசாரணை அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம். இந்த விசாரணையில் பங்குகொள்வதற்கு உங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டால், நீங்கள் கேள்விகளைக் கேட்கலாம் அத்துடன் சமர்ப்பிப்புகளை மேற்கொள்ளலாம். ஆட்கள் தாங்களாகவே செயற்படலாம் அல்லது அவர்கள் சட்டரீதியாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படலாம்.

மரணவிசாரணை அதிகாரிக்கு பொருத்தமான தகவல்கள் அனைத்தும் முன்வைக்கப்படுவதை உறுதிப்படுத்தும் நபர் மரணவிசாரணை அதிகாரிக்கு உதவும் ஒரு சுயாதீனமான வழக்கறிஞர் ஆவார். உதவுகின்ற வழக்கறிஞர் குடும்பத்திற்காகச் செயற்படுவதில்லை, ஆனால் விசாரணையில் ஆராயப்படவேண்டிய செயல்முறை மற்றும் வழக்கெழு காரணங்களின் ஒரு சுருக்கமான விளக்கத்தை அவரால் வழங்கக்கூடியதாகவிருக்கும். குடும்பத்தினர் பிரதிநிதித்துவம் செய்யப்படாமலும் தாங்களாகவே பிரதிநிதித்துவம் செய்யவும் விரும்பாவிட்டால், அந்தக் குடும்பம் சார்பாக உதவுகின்ற வழக்கறிஞர் பொருத்தமான கேள்விகளைக் கேட்கலாம்.

## சட்ட உதவி

நீங்கள் சட்ட ஆலோசனைபெற விரும்பினால், பின்வரும் சேவைகளுடன் தொடர்புகொள்ளலாம், அல்லது தொடர்புகொள்வதற்கு விரும்பும் ஒரு சட்ட நிறுவனத்தை நீங்கள் தெரிவுசெய்யலாம்.

### சட்ட உதவி குயின்ஸ்லாந்து

சட்ட ஆலோசனை, இலவச சட்டஉதவிக்கு நீங்கள் தகுதியுடையவரா என்பது குறித்த ஆலோசனைகளுக்கான தகவல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு

தொலைபேசி: 1300 65 11 88

இணையத்தளம்: www.legalaid.qld.gov.au

### குயின்ஸ்லாந்து சட்ட சங்கம்

விசாரணைகள் மற்றும் மரணவிசாரணை சட்டம் போன்றவற்றில் சிறப்புத்தேர்ச்சிபெற்ற உங்களது பிரதேசத்தில் இருக்கும் சட்ட நிறுவனங்களின் பெயர்களுக்கு

தொலைபேசி: 1300 367 757

இணையத்தளம்: www.qls.com.au

### குயின்ஸ்லாந்து மரணவிசாரணை சட்ட சேவை

மரணவிசாரணை தொடர்ப்பான நடைமுறை மற்றும் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்த ஏதேனும் ஒரு

அம்சம் பற்றி துயரமடைந்துள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகிறது.

தொலைபேசி: (07) 3214 6333
இணையத்தளம்: https://caxton.org.au/how-we-can-help/queensland-coronial-legal-service/

**சமூக சட்ட நிலையங்கள் குயின்ஸ்லாந்து**

உங்களுடைய அருகாமையிலிருக்கும் சட்ட நிலையங்களைத் தெரிந்துகொள்ளவும்.

தொலைபேசி: (07) 3392 0092
இணையத்தளம்: www.communitylegalqld.org.au/

**பழங்குடி மற்றும் ரொறேஸ் நீரிணைத் தீவகத்தார் சட்டம் சார்ந்த சேவை**

குயின்ஸ்லாந்தில் பழங்குடி மற்றும் ரொறெஸ் நீரிணை தீவகத்தாருக்கு கலாசாரரீதியாக உணர்வைப்பாதிக்கும் சட்ட சேவைகள்

தொலைபேசி: 1800 012 255 (இலவச அழைப்பு)
மின்னஞ்சல்: coronial@atsils.org.au.
இணையத்தளம்: https://atsils.org.au/

## நான் ஒரு சாட்சிக்காரராக வேண்டுமா?

பொலிசார் இறப்பைப்பற்றி உங்களிடமிருந்து ஒரு வாக்குமூலத்தை பெறுவதற்கான தேவை ஏற்படலாம்.

உங்களுடைய வாக்குமூலத்தை வாசித்தபின்னர் மேலும் சான்றுகளை வழங்க நீங்கள் விசாரணையில் பங்குபற்ற வேண்டுமாவென மரணவிசாரணை அதிகாரி முடிவுசெய்வார். நீங்கள் சாட்சியமளிக்குமாறு வேண்டப்பட்டால், முன்கூட்டியே அறிவிக்கப்படுவீர்கள். நீங்கள் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி நிச்சயமில்லையானால், மரணவிசாரணை அதிகாரியின் அலுவலகத்துடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம். நீங்கள் சட்ட ஆலோசனையைப்பெற விரும்பக்கூடும்.

## விசாரணை எவ்வளவு காலம் எடுக்கும்:

விடயத்தின் சிக்கலான தன்மை, சாட்சிக்காரர்களின் எண்ணிக்கை மற்றும் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்ட ஆட்களைப் பொறுத்து விசாரணையில் காலம் வேறுபடும், விசாரணைக்கு முன்னரான கூட்டத்தின்போது தேவைப்படும் நேரத்தின் அளவு மதிப்பிடப்படும்.

## விசாரணைக்கு முன்னரான கூட்டம் என்றால் என்ன?

விசாரணை ஒன்றினை நடாத்துவதற்கு மரணவிசாரனை அதிகாரி முடிவுசெய்த பின்னர் ஒரு விசாரணைக்கு முன்னரான கூட்டமொன்று வழமையாக நடாத்தப்படுகிறது. விசாரணைக்கு முன்னரான கூட்டத்தில், உதவிபுரியும் வழக்கறிஞர் வழக்கமாக இறப்பிற்கான ஒரு சுருக்கமான ஒரு விவரணத்தைக் கொடுப்பதுடன் , விசாரணையில் அழைக்கவிருக்கும் சாட்சிக்காரர்களுடன் விசாரனையில் கவனிக்கப்படவிருக்கும் வழக்குக்கான காரணிகளின் பரிமாணத்தை வெளியிடுவார். அத்துடன் எப்போது, எங்கே விசாரணை இடம்பெறும் என்பதை உதவிபுரியும் வழக்கறிஞர் தெரிவிப்பார். உதவிபுரியும் வழக்கறிஞரால் முன்வைக்கப்படும் விபரங்களுக்குப் பதிலாக ஆட்கள் (குடும்பத்தினர் உட்பட) சமர்ப்பிப்புகளை மேற்கொள்ளலாம். சாட்சிக்கார்கள் வழங்கும் சாட்சியங்களுடன் விசாரணையில் ஆராயப்படவேண்டிய வழக்கெழு காரணிகளை மரணவிசாரணைஅதிகாரி முடிவுசெய்வார். எப்போது, எங்கே விசாரணை

விளங்கப்படவேண்டுமென்பதையும் மரணவிசாரணை அதிகாரி தீர்மானிப்பார்.

## மரணவிசாரணை அதிகாரியின் முடிவுகள்

இறந்தவரின் அடையாளம், எப்போது, எங்கே மற்றும் எப்படி அவர் இறந்தார்; இறப்புக்கான காரணம் என்ன என்பது பற்றி மரணவிசாரணை அதிகாரி எழுத்தில் முடிவுகளை வெளியிடவேண்டும். ‘திறந்த’ நீதிமன்றிலா அல்லது ‘அறை’ யிலா தீர்ப்பு வெளியிடப்படவேண்டுமென்பதை மரணவிசாரணை அதிகாரி தீர்மானிப்பார்.

மரணவிசாரணை அதிகாரியின் தீர்ப்பினை வேறெந்த நீதிமன்றிலோ அல்லது நியாயமன்றிலோ (பொருத்தமானவிடத்து, சிபாரிசுகள்) உபயோகிக்கமுடியாது. ஆயினும், அரசவழக்குத்தொடுநர் அல்லது ஒழுக்காற்றுச் சபைக்கு ஆலோசனைக்காகவும், சாத்தியப்படக்கூடிய நடவடிக்கைக்காகவும் மரணவிசாரணை அதிகாரி சிபாரிசுசெய்ய முடியும்.

முடிவுகள் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினருக்கு வழங்கப்படவேண்டும் அத்துடன் CCQ பின்வரும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படவேண்டும்:

https://www.coronerscourt.qld.gov.au/findings-upcoming-inquests/search-findings

சிபாரிசுகள் மேற்கொள்ளப்பட்டால், முடிவுகள் பொருத்தமான அரசாங்க திணைக்களத்திற்கு அல்லது முகவருக்கு அனுப்பப்படும்.

## கலாசார உணர்திறன்கள்

கலாச்சாரரீதியான உணர்திறன் மற்றும் சரியான பணிகளில் வளர்ப்பதற்கும், ஈடுபடுவதற்கும் நாம் உறுதிபூண்டுள்ளோம். தமது தேவைகள் கவனிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக, விசாரணைகளின் ஆரம்பத்தில் ஏதேனும் கலாசார அல்லது உறவுமுறையைப் பகிர்ந்துகொள்வதற்காக குடும்பங்கள் அழைக்கப்படுகின்றன.

கலாசாரரீதியாக பாதுகாப்பான மற்றும் மதிப்புமிக்க வழியில் குடும்பங்களுக்குத் தகவல்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு நாம் கடும்முயற்சியெடுக்கிறோம்

## மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள்

மரணவிசாரணை நடவடிக்கையை நன்கு அணுகவும், புரிந்துகொள்ளவும், கலாசார, மொழி ரீதியாக வேறுபட்ட பின்னணிகளைக்கொண்ட மக்களுக்கு உதவுவதற்காக, உரைபெயர்ப்பு சேவையை எங்களால் ஒழுங்குசெய்ய முடியும்.

மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்பு சேவைகளை (TIS 131450) நீங்கள் அழைத்து 1300 304 605- இல் எங்களுடன் ஈடுபடுவதற்கும் நீங்கள் கேட்கலாம்.

## கூடுதல் தகவல்கள்

பணி வழிகாட்டல்கள் ஆவன நீதிமன்றில் நீதித்துறை பணியாளர்களால் விநியோகிக்கப்பட்ட செய் முறைகளாகும். விநியோகிக்கப்பட்ட, நடைமுறை வழிகாட்டல்களாகும்

குடும்ப வாக்குமூலங்கள் பற்றிய பயிற்சி வழிகாட்டல்கள் பற்றி இங்கே காணப்படுகின்றன்: https://www.coronerscourt.qld.gov.au/__data/assets/pdf_file/0007/797740/2024.02-family-statements.pdf

விசாரணைக்கு முன்னரான கலந்துரையாடல் மற்றும் விசாரணைகளுக்கான நடைமுறைகள் இங்கே காணப்படுகின்றன:

https://www.coronerscourt.qld.gov.au/__data/assets/pdf_file/0012/797736/2024.01-procedures-for-pre-inquest-conferences-and-inquests.pdf

## தொடர்புகளும் ஆதரவு சேவைகளும்

### Coroners Court of Queensland (மரணவிசாரணை அதிகாரி நீதிமன்றம் குயின்ஸ்லாந்து)

GPO Box 1649 Brisbane QLD 4001
தொலைபேசி: (07) 3738 7050 பிரதாத பதிவகம்( *main registry in Brisbane*)
Brisbane-க்கு வெளியே 1300 304 605 ( உள்ளூர் அழைப்புக்குக் கட்டணம் செலுத்தவேண்டும்)
மின்னஞ்சல்: CoronersCourt@justice.qld.gov.au
இணையத்தளம்: www.coronerscourt.qld.gov.au

### குயின்ஸ்லாந்து பொலிஸ் மரணவிசாரணைப் பிரிவு (CSU)

எமது பெருமளவிலான பதிவகங்களில் சீஓ அமைந்துள்ளது, மரணவிசாரணை நடைமுறைகளை சீ எஸ் யூ ஒருங்கிணைக்கிறது அத்துடன் தடயவியல் நோயியல் நிபுணர்கள் மற்றும் பிணவறை ஊழியர்களுடன் ஒருங்கிணைகிறது.

தொலைபேசி: (07) 3292 5901
மின்னஞ்சல்: QPSOfficeStateCoroner@police.qld.gov.au

### Forensic Pathology and Coronial Services (தடயவியல் நோயியல் மற்றும் கொரோனியல் ஊழியர்கள்)

தொலைபேசி: 1800 000 377 (இலவச அழைப்பு)
மின்னஞ்சல்: Forensics@health.qld.gov.au

### கொரோனியல் குடும்ப சேவைகள்

தொலைபேசி: (07) 3096 2794
1800 449 171 (இலவச அழைப்பு)
மின்னஞ்சல்: FSS.Counsellors@health.qld.gov.au

### பிறப்பு இறப்பு மற்றும் திருமண பதிவகம்

PO Box 15188 City East QLD 4002
தொலைபேசி: 13 74 68
மின்னஞ்சல்: bdm-mail@justice.qld.gov.au
இணையத்தளம்:: www.qld.gov.au/rbdm

### பாதிக்கப்பட்டவர் உதவி குயின்ஸ்லாந்து

குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவருக்குத் தகவல்கள், ஆலோசனை ஆதரவு சேவைகள் மற்றும் பண உதவி வழங்குதல்

தொலைபேசி: 1300 546 587
இணையத்தளம்: https://www.qld.gov.au/law/crime-and-police/victim-assist-queensland

### சுகாதார குறைகேள் அதிகாரியின் காரியாலயம்

குயின்ஸ்லாந்து சுகாதார சேவைகள் மற்றும்/அல்லது வழங்குநர்கள் பற்றிய

முறைப்பாடுகள்/கவலைகளை முகவர் எடுப்பார்.

தொலைபேசி: 133 646
இணையத்தளம்: www.oho.qld.gov.au

## வேலைதொடர்பான மரணங்கள் மற்றும் பாரதூரமான நிகழ்வுகளுக்கான ஆலோசனைக் குழு

வேலையிட மரணத்தால் காயப்பட்ட பணியாளர் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தகவல்களையும், ஆதரவையும் வழங்குதல்.

தொலைபேசி: 0417 910 130
மின்னஞ்சல்: OHSConsultativeCommittee@oir.qld.gov.au
இணையத்தளம்: www.worksafe.qld.gov.au/about-us/consultative-committee

## Queensland Homicide Victim Support Group

கொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 24 மணி நேரம்/7 நாட்கள் ஆதரவு, பரிந்துபேசுதல் மற்றும், தகவல்கள் போன்றவற்றை வழங்குதல்

தொலைபேசி: 1800 774 744
இணையத்தளம்:www.qhvsg.org.au/

## இரக்கமுள்ள நண்பர்கள் குயின்ஸ்லாந்து (Compassionate Friends Queensland)

ஒரு குழந்தையின் மரணத்தைத் தொடர்ந்து குடும்பத்தினருக்கு நட்பையும், துயரக் கல்வியை வழங்குதல்.

தொலைபேசி: 1300 064 068
மின்னஞ்சல்: admin@tcfqld.org.au
Website: https://tcfa.org.au/qld/

## Survivors of Suicide Bereavement Support Association (SOSBSA)

தற்கொலையால் துயரமடைந்துள்ளோருக்கும், தற்கொலை ஆபத்தில் இருப்போருக்கும் ஆதரவளித்தல்

தொலைபேசி: 1300 659 467
இணையத்தளம் : www.sosbsa.org.au

## அருகிலிருத்தல்- தற்கொலைக்குப்பின்னர் ஆதரவு

தற்கொலையால் துயரமடைந்துள்ள அல்லது பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளித்தல்

தொலைபேசி: 1300 727 247
காதுகேளாதோர் மற்றும் செவிமடுப்பதில்சிரமப்படுவோருக்கு: SMS 0428 842 041 (காலை 6 மணி- மாலை 10 மணி- 7 நாட்கள்)
இணையத்தளம்: www.standbysupport.com.au

## தற்கொலை திரும்ப அழைப்பு சேவை

தற்கொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொலைபேசி மற்றும் மெய்நிகர் உளநல ஆலோசனை 24 மணி நேரம்/7 நாட்களும் இலவசமாக வழங்கப்படுகிறது.

தொலைபேசி: 1300 659 467
இணையத்தளம்: www.suicidecallbackservice.org.au/

## ரோசாப்பூக்கள் (Roses in the Ocean)

a Peer CARE warmline Companion - தற்கொலையால் துயரத்தில் வருந்தும் பயிற்றப்பட்ட தன்னார்வத்தொண்டாளருடன் மீண்டும் அழைக்கும் தொலைபேசிசேவையில் நீங்கள் பேசலாம்.

தொலைபேசி: மீண்டும் அழைப்பு சேவை 1800 77 7337
இணையத்தளம்: https://rosesintheocean.com.au/

### Lifeline Australia

இலவச 24 மணிநேரம்/7 நாட்கள் தொலைபேசி நெருக்கடி ஆதரவு வழங்கல்.

தொலைபேசி: 13 11 14
இணையத்தளம்: www.lifeline.org.au/

### குழந்தைகள் உதவி இணைப்பு (Kids Helpline)

5 க்கும் 25க்கும் இடைப்பட்ட வயதுடைய இளையோருக்கு மெய்நிகரிலும் (online) தொலைபேசிமூலமும் உளநலஆலோசனை இலவசமாகவும், அந்தரங்கமாகவும் 24 மணி நேரம்/7 நாட்கள் வழங்கப்படுகிறது.

தொலைபேசி: 1800 55 1800
இணையத்தளம்: www.kidshelpline.com.au/

### Mensline

ஆஸ்திரேலிய ஆண்களுக்கு இலவச தொலைபேசி மற்றும் மெய்நிகர் (online) உளநலஆறுதல் ஆலோசனை மற்று ஆதரவு வழங்கல்.

தொலைபேசி: 1300 78 99 78
இணையத்தளம்: www.mensline.org.au/

## பூர்வீக மக்கள் குடும்ப ஆதரவு சேவைகள்

### 13 YARN

உணர்வு மேலீட்டால் அல்லது ஒத்துழைப்பதில் சிக்கலுள்ள கூட்டத்தினருக்கு கலாசார ரீதியாகப் பாதுகாப்பான உதவி இணைப்பை 24 மணி நேரம்/7 நாட்கள் வழங்குதல்.

தொலைபேசி: 13 92 76
இணயத்தளம்: www.13yarn.org.au/

### பூர்வீக, ரொறெஸ் நீரிணை தீவகத்தோர் குடும்ப நல்வாழ்வு சேவைகள்

சமூகம்சார்ந்த, உணர்வுபூர்வமான, உடல்ரீதியான மற்றும் ஆன்மீக நல்வாழ்வுக்கும், அவர்களுடைய குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும், மேலும் குடும்பங்களைப் பாதுகாப்பாகப் பராமரிக்க உதவ பூர்வீக, ரொறெஸ் நீரிணை தீவகத்தோர் குடும்ப நல்வாழ்வு சேவைகள் இலவச மற்றும் இரகசிய ஆதரவை வழங்குகிறது.

தொலைபேசி: 1300 117 095
இணையத்தளம்: www.familywellbeingqld.org.au/

### Thirrili

சமூகங்கள், குடும்பங்கள் மற்றும் தற்கொலைக்குப் பின் உணர்வதிர்ச்சியை அனுபவிக்கும் தனியானவர்களுக்கு Thirrili Indigenous Postvention Response Service ஆதரவளிக்கிறது துயரம் மற்றும் சுகம்பெறுதலில் சுயநிர்ணய உரிமையை ஊக்குவித்து, உள்ளூர் கலாசார நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகளை அவர்களுடைய கலாசார பாதுகாப்பான ஆதரவு அமைப்பு மதிக்கிறது. தற்கொலை ஆதரவு தொலைபேசி சேவையை வாரத்தில் 7 நாட்களும், 24 மணி நேரமும் Thirrili செயற்படுத்துகிறது.

தொலைபேசி: 1800 805 801
இணையத்தளம்: https://thirrili.com.au/

### மொப் லிங்க் (Mob Link)

ஒரே நாளில் பராமரிப்பு அல்லது சுகாதார மற்றும் சமூக சேவைகளுடன் இணைப்பதற்கான ஆதரவைப் பெறுவதற்கு உள்வாங்கும் ஊழியர்கள், தாதிமார்கள், வைத்தியர்கள், பழங்குடி வெளியிட பணியாளர்கள் மற்றும் சமூகசேவையாளர்கள், மோப் லிங்க் ஆதரவாளர்கள்(Mob Link supports), தென்கிழக்கு குயின்ஸ்லாந்தில் பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவகத்தார் (Torres Strait Islander people) போன்றோரின் மோசமான குழுவினால் பணிக்கமர்த்தப்பட்டுள்ளது.

தொலைபேசி: 1800 254 354 காலை 7மணி முதல் மாலை 8 மணிவரை 365 நாட்கள்
இணையத்தளம்: https://www.iuih.org.au/our-services/mob-link/

# நீதிமன்றில்

**மரணவிசாரனை அதிகாரியின் அமர்வு**

**மரணவிசாரணை நீதிமன்ற ஆதரவு அலுவலர்:**
அவர்கள் நீதிமன்றத்தை நடாத்துகிறார்கள், விசரணையை பதிவுசெய்கிறார்கள், சாட்சிக்காரர்களிடம் சத்தியப்பிரமாணம்/வாக்குறுதியைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

**சாட்சி:**
விசாரணையில் சாட்சியம் அளிப்பதற்கு அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்

**சட்டநிபுணர்கள் உதவுதல்:**
விசாரணையில்

**வழக்கறிஞர்கள்:**
ஆர்வமுள்ள பிற தரத்தினரைப் பிரதி நிதித்துவப்படுத்துவர் சட்டநிபுணர் ஆவார்.

**குடும்பமும், நண்பர்களும்:**
**இறந்தவரின் அன்புக்குரியவர்கள்**

**ஊடகமும் பொதுமக்களும்:**
அநேகமான விசாரணைகள் பொதுமக்களுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது – ஊடகம் மற்றும் பொது உறுப்பினர்கள் பங்குபற்றலாம்.